O.S.170/2019
PW2 – விஜயலெட்சுமி
நாள் 05.02.2026, 04.10 P.M.

**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** எனது கணவர் மார்க்கண்டேயும், வாதியின் தகப்பனார் வேலுச்சாமியும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். வேலுச்சாமிக்கு வாதியும், 1,2 பிரதிவாதியும் மக்கள் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மனைவி. 1 மற்றும் 3 பிரதிவாதிகள் நீண்ட வருடங்களாக பிரிந்து வருகிறார்களா என்றால் சுமார் 4,5 வருடங்களாக பிரிந்து வாழ்கிறார்கள். சரியாக எத்தனை வருடங்கள் என்று எனக்கு தெரியாது. தாவா வழக்கானது எந்த வருடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சுமார் 6 வருடங்களுக்கு முன்பு. தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னரே 1 மற்றும் 3ம் பிரதிவாதிகள் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. வாதி நாகேஸ்வரி அவருடைய தாய் மற்றும் தகப்பனாரின் சொத்துக்களில் ஏதாவது ஒன்றை அனுபவித்து வருகிறார்களா என்றால் இல்லை. 1,2 பிரதிவாதிகள் தாய், தந்தையின் சொத்துக்களை முறைப்படி பாகப்பிரிவினை செய்யாமல் தனித்தனியாக ஒவ்வொரு நபருக்கும் கொஞ்சமாக அனுபவம் செய்து வருகிறார்கள். 3ம் பிரதிவாதியின் கணவர் 3ம் பிரதிவாதிக்கு எந்தெந்த சொத்துக்களை தான பத்திரம் மூலம் எழுதிக்கொடுத்தார் என்றால் சர்வே எண் தெரியாது. அந்த வயல்களின் பெயர் தாவுக்காடு, சங்கர வாய்க்கால் ஆகும். அந்த 2 சொத்துக்களின் அளவுகள் எனக்கு தெரியாது. எனது கணவரும் வாதியின் தகப்பனாரும் அவர்களின் மூதாதையர் சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டார்களா என்றால் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டார்கள்.

3. எனது கணவருக்கும், வாதியின் தகப்பனாருக்கும் சில சொத்துக்கள் கூட்டுப்பட்டாவாக இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த சொத்து கலம் என்று அழைக்கப்படுகிறது. அந்த சொத்தானது பொதுவாக பாகம் பிரிக்கப்படாமல் எனது கணவருக்கும், வாதியின் தகப்பனாருக்கும் பொதுவாக கதிர் அடிக்கும் கலமாக இருந்து வந்துள்ளது. அந்த சொத்தில் எனது கணவருக்கும் வாதியின் தகப்பனார் வேலுச்சாமிக்கும் சரிபாதி பங்குள்ளது. என்னிடம் காட்டப்படும் கணினி பட்டா பி.வா.சா.ஆ.1 ஆகும். வேலுச்சாமி உயிருடன் இருக்கும் போதே அவருடைய

சொத்துக்களை மகன்கள் இருவருக்கும் பங்காக பிரித்துக்கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. வாதி நாகேஸ்வரிக்கு அவருடைய தாயார் வழி சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டு தனித்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

4. வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகளுக்கு இடையே சொத்துக்கள் சம்மந்தமாக ஏற்கனவே பாகம் பிரித்துக்கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும், 1, 3 பிரதிவாதிகளுக்கு இடையே ஏற்பட்ட மன வருத்தத்தின் காரணமாக 1வது பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நானும், 3வம் பிரதிவாதியும் சுமார் எத்தனை வருடங்களாக பேசிக்கொள்வதில்லை என்றால் சுமார் 7,8 ஆண்டுகளாக பேசிக்கொள்வதில்லை. 3ம் பிரதிவாதியின் மீது உள்ள வருத்தத்தின் காரணமாக 3ம் பிரதிவாதிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.02.05 18:26:14 +0530